**Previous Examination date – 24.06.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 298 of 2018**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : சேந்தர் மூர்த்தி** | **Father/Husband's Name : கந்தசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 08.07.2026.**

**Accused absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.புகழேந்தி ஆகியோர்களுடன் பணிபுரிந்துள்ளேன். சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.புகழேந்தி ஆகியோர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் பழனி தாலுகா காவல்நிலையத்தில் கடந்த 01.09.2017ம் தேதி அதிகாலை 1.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது திலகவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று விசாரணை செய்து பழனி தாலுகா காவல்நிலைய கு.எண்.303/2017 பிரிவுகள் 279, 304(A) இ.த.ச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் கோப்பை காவல் ஆய்வாளர் புகழேந்தி அவர்களிடம் ஒப்படைத்ததை அவர் மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தமிழன், நந்தகுமரன் ஆகியோர் முன்னிலையில் 01.09.2017ம் தேதி காலை 8.00 மணிக்கு சம்பவயிடத்தைப்பார்வையிட்டு பார்வைமகஜர் தயார் செய்து மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 01.09.2017ம் தேதி இறந்துபோன சந்திரகுமார் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய தலைமை காவலர் சந்தானகுமார் என்பவரிடம் தபாலை கொடுத்து அனுப்பி வைத்தார். பின்பு பழனி அரசு மருத்துவமனை சவகிடங்குக்கு முன்பு வைத்து இறந்து போன சந்திரகுமார் என்பவர் பிரேதத்தின் மீது 01.09.2017ம் தேதி மதியம் 09.00 மணி முதல் 10.30 வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இறப்பின் காரணம் அறிவதற்காக உடற்கூறாய்வு செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமை காவலர் சந்தானகுமார் என்பவர் மூலம் மேற்படி பிரேதத்தை பிரேத கூறாய்வு செய்ய அனுப்பி வைத்தார். பின்னர் இவ்வழக்கின் எதிரி ஈஸ்வரன் என்பவர் 02.09.2017ம் தேதி நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க பிணை பெற்று விடுவிக்கப்பட்டார். பின்னர் இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 57 T 1164 என்ற Bower Track என்ற டிராக்டரையும் மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன சந்திரகுமார் என்பவர் ஓட்டி சென்ற TN 39 AF 9649 என்ற இருசக்கர வாகனமான TVS XL Heavy Duty Super என்ற வாகங்களை தணிக்கை செய்ய பழனி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார். இவ்வழக்கின் இறந்துபோனவரின் பிரேதத்தை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் ஸ்ரீதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத கூறாய்வு அறிக்கை பெற்றார். **சந்திரகுமார் என்பவரின் பிரேத கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து பின்பு வாக்குமூலம் பதிவு செய்து TN 57 T 1164 என்ற Bower Track என்ற டிராக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்றார். **TN 57 T 1164 என்ற Bower Track என்ற டிராக்டர் வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பழனி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து பின்பு வாக்குமூலம் பதிவு செய்து TN 39 AF 9649 என்ற இருசக்கர வாகனமான TVS XL Heavy Duty Super வாகனத்தின் ஆய்வறிக்கை பெற்றார். **TN 39 AF 9649 என்ற இருசக்கர வாகனமான TVS XL Heavy Duty Super வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வாகனங்களை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மோகன பிரியா மேற்படி இரு வாகனங்களையும் வாகன

விபத்து இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என சான்றளித்துள்ளார். இந்த வழக்கில் பிரேத பரிசோதனைக்கு சென்ற காவலர் சந்தானகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 279,304(A) இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

2. நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து பொய்யான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் இறந்துபோனவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.08 17:42:56 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.